ஸ்ரீ:

விகாரி ௵ பங்குனி ௴
மார்ச் 2020 - ஏப்ரல் 2020

மலர்: 2
இதழ்: 12

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்





MONTHLY NEWSLETTER FROM:

**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**

MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799,
Email : svdd.mylai@gmail.com, web: www.svdd.com




தவனோத்ஸவம்
ஸங்க்ராந்தி, இராப்பத்து சாற்றுமுறை உத்ஸவம்

விகாரி ௵ பங்குனி ௴
மார்ச் 2020 - ஏப்ரல் 2020

மலர்: 2
இதழ்: 12

ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

**காலை**

| ஞாயிறு முதல் புதன் வரை | | | வியாழன் முதல் சனி வரை | | |
|---|---|---|---|---|---|
| 6.30 | - | விச்வரூபம் | 6.00 | - | விச்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் | 7.30 | - | பொது தரிசனம் |
| 9.45 | - | சாற்றுமுறை | | | |

12.00 - உச்சிகாலம்

**மாலை**

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**
1. ஸ்ரீ R. முகுந்தன் 2. ஸ்ரீ P. சேஷாத்ரி 3. ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

Photo Courtesy: T. Mohan Babu, P.S. Anand, K. Akash & Thillai Ranganathan
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: ye**SK**ay



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 24953799
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஶ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்$^3$ரி ஸமம் ஸ்தா$^2$நம் ப்$^3$ரஹ்மாண்டே$^3$ நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே$^3$வோ ந பூ$^4$தோ ந ப$^4$விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள் !

'பொருளல்லாத என்னைப் பொருளாக்குவது', என எம்பெருமானின் கருணையைப் புகழ்வர். இது என்ன ஆச்சர்யம்; கல்லைக் காரிகையாக்குபவர் ஆயிற்றே! அதிலும் ஆச்சர்யம், 'உபயோகமற்ற ஒரு மாதத்தை' மிகச் சிறந்த மாதமாக ஆக்கியதுதான் –- பங்குனி மாதத்தைத்தான் குறிப்பிடுகிறோம்.

வடமொழியில் இம்மாதத்தை 'பல்குநீ' என்போம் – 'பல்கு' என்றால் உபயோகமற்ற, எனப் பொருளாம். தம் படைப்பில் இப்படி இருக்கலாமா? பார்த்தார் எம்பெருமான்; பிராட்டியை இம்மாத உத்தரத் தாரையில் கரம் பிடித்தார். அவ்வளவுதான், தினம் எப்படிப்பட்டதாயினும் சுப கார்யங்கள் செய்ய உலகத்தோர் இந்நாளையேற்றனர் –- 'பங்குனி மாதம் பருப்புக் கல்யாணம்' எனப் பழமொழி உருவாகியது! எம்பெருமானார் இந்நாளில் அன்றோ திவ்யதம்பதிகளிடம் தானும் சரணாகதி செய்து, நமக்கும் உபதேசித்தார். மாதமும் சீர் பெற்றது; மானிடரும் சீர் பெறலாம். இன்றே திருவேங்கடமுடையானின் திருவடிகளில் சரணாகதி செய்து, உய்யலாம் வாருங்கள்!

இம்மாத 'தேசிக ஸந்தேச' ஸஞ்சிகை விசேஷ ஒளிப்படங்கள் மூலம் கண்ணுக்கும் மனதுக்கும் விருந்தாக அளிக்கும் காக்ஷிகள் :

- ✓ **திருமழிசையாழ்வார் திருநக்ஷத்ரம்**
- ✓ **ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவர் வித்யா அபிவ்ருத்தி அர்ச்சனை உத்ஸவம்**
- ✓ **ச்ரவணம் புறப்பாடு**
- ✓ **திருக்கச்சி நம்பிகள் திருநக்ஷத்ரம்**
- ✓ **தவனோத்ஸவம்**
- ✓ **மாசி-பௌர்ணமி புறப்பாடு – ஸமுத்ர ஸ்நானம்**
- ✓ **வெள்ளிக்கிழமை உத்ஸவம்**

கண்டு வாசித்து இன்புறுமின்!

ஸ்ரீ:

# தூப்புல் வள்ளல் செய்யும் அற்புத விண்ணப்பம்

Dr. ஹேமா ராஜகோபாலன், பெங்களூரு

ஸ்வாமி தேசிகன் அருளிச்செய்த படைப்புகளில் ஸ்தோத்ர நூல்களின் பெருமை அளவிடற்கரியது. தத்வம், ரஹஸ்யம், காவ்யம், நாடகம் என்று பல்வேறு பிரிவுகளிலும் எண்ணற்ற நூல்களை இவர் அருளிச் செய்துள்ள போதிலும் வடமொழி வித்தகர்கள் மட்டுமின்றி அம்மொழியறியா மற்றோரும் கூட ஈடுபடும்படியாக அமைந்தவை இந்த ஸ்தோத்ரங்கள். **பாட்யே ச கேயே ச மதுரம்** என்பர் ஸ்ரீமத் ராமாயணத்தை! அதுபோல் பொருளுணர்ந்து படிப்பதற்கும், அதன்றியும் அங்குள்ள பாவத்தை உணர்ந்து அதற்கேற்ப ராகத்தை அமைத்துப் பாடுவதற்கும் இனியவை என்பர். அங்ஙனம் பாவ பூர்வமாகப் பாடுகையில் பக்தி மிகு இத்துதியை படைத்தளித்த அக்கவியை நாமும் நம் நெஞ்சினால் நோக்கிக்காணலாமன்றோ!

*ஷட்விதம் ஸ்தோத்ர லக்ஷணம் என்பர். ஆறு விஷயங்கள் ஒரு ஸ்தோத்ரத்தில் அமைந்திருக்கவேண்டுமென்பது நியதி.*

*1. நமஸ்கரித்தல் 2. ஆசிகூறுதல் 3. ஸித்தாந்தம் கூறுதல் 4. பராக்ரமத்தைப் புகழ்தல் 5. பெருமைகளைப் பேசுதல் 6. ப்ரார்த்தனை செய்தல் என்பன.*

*ஸ்வாமியின் ஸ்தோத்ரங்களும், அஷ்டகம், பஞ்சாசத், சதகம் என்பன போன்ற சிறிய, பெரிய அனைத்து ஸ்தோத்ரங்களும் இந்த ஆறு குணங்களுடன் அமைந்திருப்பதைக் காணலாம். நம: என்றும் ப்ரபத்யே என்றும் முதல் ச்லோகத்திலேயே அல்லது முதல் பகுதியிலேயே தம்முடைய ப்ரணாமங்களைத் தெரிவிப்பதும், இந்த ஸ்தோத்ரத்தை அநுஸந்திப்பதால் கிட்டும் பலன்களை பலச்ருதியில் கூறுவதும், ஸ்தோத்ர நாயகரின் பெருமைகளைப் போற்றி, குணநலன்களைக் கூறுவதுடன் நம் ஸம்ப்ரதாயம் மற்றும் இதில் இவருடைய பெருமைமிகு ஸ்தாநம் என்ன என்பதையும் அருளிச் செய்தபின் இந்நாயகரிடம் தமது ப்ரத்யேகமான ப்ரார்த்தனை என்ன என்பதும் ஸ்வாமியால் முன்வைக்கப் படுகிறது.*

ஒரு ஸ்தோத்ரத்தில் பலச்ருதி என்பது பொதுவாக அதனை ஸேவிக்கும் அனைவருக்கும் கிடைக்கும் பலன்களைக் கூறுகிறது என்றாலும், ஸ்வாமி தாம் அருளிச் செய்துள்ள ஒவ்வொரு ஸ்துதியிலும் தம்முடைய தனிப்பட்டதான அபிலாஷையை, தம் உள்ளக்கிடக்கையைப் பூர்த்தி பண்ணிவைக்குமாறு ப்ரார்த்திப்பது மிக மிக அழகு! ஸ்தோத்ரம் யாரைக் குறித்துப் பண்ணப்படுகிறதோ அவரிடம் இவர் வைக்கும் ப்ரார்த்தனை மிகப் பொருத்தமாய் அற்புதமாய் அமைந்துள்ளது என்பதுடன் கூட இந்த ப்ரார்த்தனையை இவரைத் தவிர வேறு



யாரிடமும் விண்ணப்பிப்பது உசிதமாகாது என்று கருதும் வண்ணமும் அமைந்துள்ளதை நம்மால் மறுக்கவியலாது!. இவ்வாறு **மெய் நின்று கேட்டருளாய், அடியேன் செய்யும் விண்ணப்பமே** என்று ஆழ்வார் அருளிச் செய்த ரீதியில் நம் ஸ்வாமியும் அருளிச் செய்துள்ள விண்ணப்பங்கள் பலவுண்டு!

பெருமானிடம் எதையுமே வேண்டிக்கொள்ளக்கூடாது என்று நம் பெரியோர்கள் கூறுவதுண்டு. இதற்குக் காரணம் நமக்கு எது தேவையென்பது நமக்குத் தெரியாது என்பதனால் தான்! தேவையல்லாத வற்றையெல்லாம் தேவைகளாக்கி, தேவதைகள் அல்லாதவர்களையெல்லாம் தெய்வங்களாக்கித் திண்டாடுவது கூடாது என்பது நம் ஆசார்யர்கள் நமக்கு இடும் கட்டளை! ஸ்வாமி தேசிகன் உண்டியே உடையே என அற்ப பலன்களை நாடித் திரியும் பாமரர்களைப் போலன்றி தாம் ஒரு ஸதாசார்யனாகத் திகழ்ந்ததற்கிணங்க அவர் எம்பெருமானிடம் செய்த விண்ணப்பங்கள் அனைத்தும் சாலச் சிறந்தவை, நமக்குப் பழுதின்றி வாழும் வகையை போதிக்க வல்லவை. அறிந்து, உணர்ந்து, மகிழ அவற்றுள் சில:-

ஸ்வாமி தேசிகன் **ஸ்ரீஹயக்ரீவனைத்** துதிக்கிறார். **திசந்துமே தேவ** என்று அவ்வெம்பெருமானின் கடாக்ஷத்தையும், **ஜிஹ்வாக்ர ஸிம்ஹாஸனம் அப்யுபேயா:** என்று தமக்கு நாவன்மையை அருளிச் செய்யவும் ப்ரார்த்திக்கிறார். மதுவென்னும் அரக்கனை வென்று வேதத்தை மீட்டுக்கொடுத்ததால் மதுவிஜயீ எனப்படுபவர் இப்பெருமான். வேத ப்ரமாணங்களைக் கொண்டு வாதித்து பிற மதங்களை நிரஸனம் பண்ணி வெல்வதற்குத் தம் நாவின் நுனியில் ஆஸநமிட்டு அமர்ந்து வாதிடவேண்டியவர் இவ்வெம்பெருமானேயன்றோ! எனவே இவரிடம் இத்தகைய ப்ரார்த்தனையை ஸ்வாமி கோரியது உசிதமானது தானே!

**தசாவதார ஸ்தோத்ரத்தில் சுபம் ஆதநோது** [மங்களம் அருளுவாயாக] என்று பெருமாளிடம் ப்ரார்த்திக்கிறார். எம்பெருமான் தசாவதாரம் போன்ற அவதாரங்களை எடுத்ததன் காரணமே **ஜகன் மங்களம்** என்னும் நோக்கமேயன்றோ! **பரித்ராணாய ஸாதூநாம்** என்றபடி அடியார்களை ரக்ஷித்து தர்மத்தை நிலைநாட்டுவதொன்றே இவனுடைய அவதார ரஹஸ்யம் என்பதை நாம் அறிகிறோம். எனவே இத்துதியில் இவரது ப்ரார்த்தனையானது சுபம் ஆதநோது என்பதாக அமைந்தது.

திருவரங்கனை த்யானிக்க **ஸ்ரீ பகவத் த்யான ஸோபானம்** என்னும் ஸ்துதியைஅருளிச் செய்தார். **தைவதம் தைவதானாம்** என்று ச்ருதிகளாலும் போற்றப்படும் இவ்வெம்பெருமானை **காரணந்து த்யேய:** என்றபடி **உள்ளம் உரை செயல் உள்ள இம்மூன்றையும் உள்ளிக் கெடுத்து இறையுள்ளில் ஒடுங்கே** என்ற ஆழ்வாரின் கூற்றுப்படி முக்கரணங்களையும் ஒருமுகப்படுத்தி த்யானிக்கவேண்டாமோ! இதற்காக **பக்திம் காடாம் திசது** என்பது இப்பெருமானிடம் ஸ்வாமி செய்யும் விண்ணப்பம். அதாவது திடமான பக்தியைத் தமக்கு அருளுமாறு வேண்டுவது என்னே பொருத்தம்!

அடுத்து ஸ்வாமியினுடைய **அபீதி ஸ்தவத்தில்** தமக்கு வாழ்வதற்குரிய ஒரு நல்ல இடத்தை வேண்டுகிறார். அச்சத்தை நீக்கும்படியும் துதிக்கிறார். அன்னியர்களின் படையெடுப்பால் திருவரங்கத்தில் வஸிக்க முடியாத சூழ்நிலை. அனுதினமும் அரங்கனை ஸேவிக்கவியலாத ஒரு அவலநிலை ஏற்பட்டதால் இது போன்ற நிலை மறுபடியும் வரவேண்டாம் என்று ப்ரார்த்திப்பதுடன்இவ்வுலகில்தாம்வாழும்காலம்வரை அரங்கனை அநுபவிக்கவிடாமல் செய்யும் எதிரிகள் இல்லாத இடத்திலே வாழவேண்டும், அத்துடன் **பரஸ்பர ஹிதைஷிநாம்** என்றபடி ஒருவருக்கொருவர் நன்மையையே நாடும் நல்லோர்களின் நடுவே தாம் வாழ அருளவேண்டுமென ப்ரார்த்திக்கிறார். அரங்கனின் ஸேவையை சில காலம் இழந்திருந்ததால் ஸ்வாமி தேசிகனுக்கு உண்டான மன வலியை இதன்மூலம் நம்மாலும் உணரமுடிகிறதன்றோ?

**பூஸ்துதியில்** இவரது வேண்டுகோள் என்னவென்பதைக் காணலாம். ஸம்ஸாரமென்னும் அடிசுடும் கொடிய கோடைக்காலம். இதில் ஆத்யாத்மிக, ஆதிபௌதிக, ஆதிதைவிக என்னும் வாட்டும் மூன்றுவிதமான தாபங்கள் வேறு. ''தாயே! உன்னுடைய குளிர்ந்த கடாக்ஷங்களினால் கருணைமழை பொழியும்படி செய்து அடியேனை இன்பமுறச் செய்யவேண்டும்'' என வேண்டுகிறார். **அஹம் ஸ்மராமி மத்பக்தம்**

## ஸ்ரீ தேசிக மொழி

“பெருமாளும் பிராட்டிமாரும் இருக்க நான் என்ன கொடுப்பது?” என்று கோதா பிராட்டி வினவ, அம்மா! நீ அவதரித்து அம்ருதமயமான திருப்பாவை மற்றும் திருமொழி அருளிய பிறகு அதுபோலவே நூல் இயற்ற ஆவல் கொண்ட கவிகள் யாவரும் உனது அருள்பெற்றல்லது அவ்வித நூல் அமைப்பது ஸாத்யமன்று என்று நிச்சயித்து உன்னையே சரணமடைகின்றனர். ஆகவே அடியேனும் உன் கருணையை வேண்டி நிற்கிறேன்.

– **ஸ்ரீ கோதாஸ்துதி**



என்று அடியார்களைத் தம் நினைவில் கொண்டு தம்மிடத்திற்குத் தாமே அழைத்துச் செல்வேன் என்றருளிச்செய்த கருணைமிகு ஸ்ரீவராஹ எம்பெருமானின் மஹிஷியாகிய தேவரீரே இக்கருணை மழையை பொழியச் செய்ய வல்லவர் என்று பூமிப்பிராட்டியிடம் இங்ஙனம் ப்ரார்த்திக்கிறார்.

**அன்றே அடைக்கலம் கொண்ட நம் அத்திகிரித் திருமால்** என்று நன்றி நிறை மனத்தராய் இந்தப் பெருமாளிடம் தம் ஆசையை இவர் அருளிச்செய்யும் அழகுதான் என்னே!. வரம் தரும் வள்ளலாகிய இவ்வரதனின் திருவருளை மட்டுமின்றி திருமேனியழகையும் ஆசையோடு அநுபவிக்கிறார். **ஆனைபரிதேரின் மேல் அழகர்** வந்தார் என்று பாடியதற்கிணங்க அத்திகிரி அருளாளனின் உத்ஸவங்களை எல்லாம் ஆழ்ந்து அநுபவித்த இவர் இப்படித்தானே ஒரு வேண்டுகோளை விடுக்கமுடியும்! எப்படி? காணலாம்! அதாவது இவருக்கு இவ்வழகைக் காணக் கண் கோடி வேண்டுமாம், அதுமட்டுமின்றி அக்கண்களும் க்ஷணகாலம்கூட இமைக்காதவையாய் இருக்கவேண்டுமாம்! இமைப்பது என்பது இனிய அநுபவத்தின் இழப்பேயன்றோ! இத்துடன் இப்பெருமானின் விஸ்வரூப ஸேவையையும் ஸேவிக்க ஆசைப்படுகிறார். **இந்திராயா: அநிப்ருத பரிரம்பை:** என்று பாடுகிறார். ''எம்பெருமானே! இரவு முழுவதும் ஸ்ரீபெருந்தேவித் தாயாரின் அணைப்பில் உறங்கியதால் உன் சங்குக்கழுத்தில் அவளுடைய பொன் வளைகள் அழுத்தியதால் உண்டான அந்தத் தழும்பை அடியேன் காணவேண்டுமென்பது இவர் வைக்கும் வேண்டுகோள்!

தாயும் தந்தையுமான இத்திவ்ய தம்பதிகள் மகிழ்ந்திருப்பதால் ப்ரஜைகளுக்குக்கிடைப்பது பெரிய லாபமன்றோ! பலரும் பல எம்பெருமான்களுக்கும் பலபடியான ஸுப்ரபாதங்கள் பாடியிருந்தாலும் இப்படி இவர் ஸ்தோத்ரம் பண்ணி பள்ளியுணர்த்தும் அழகிற்கு இணையேதும் உண்டோ! இவ்வரதனின் அழகில் லயித்துக்கிடக்கும் இந்த ஆனந்தாநுபவத்தை விட்டு என்றோ, எப்பொழுதோ கிடைக்கப்போகும் அந்த மோக்ஷானந்தத்தைத் தம் உள்ளம் விரும்புமோ என்று கேட்பதுபோல் **'வைகுண்ட வாஸேபி ந மே அபிலாஷ:'** என்றல்லவோ ஸத்யம் பண்ணுகிறார்!

**தெய்வநாயனுக்கு** ஒரு காதல் புனமயிலாகி அவரைப் போற்றிப் பாடிய இந்த **தேசிகநாயகி**யின் ப்ரார்த்தனை எப்படியிருக்கும்? காணலாமே! நன்னெறியை உணராது மனம்போன போக்கில் திரியும் பறவையாய் பறந்து கொண்டிருந்த தம்மை நூலில் கட்டிய பறவையாக்கி [**ஸூத்ரானுபத்த சகுனி**] முதலில்

இஷ்டம்போல் பறக்கவிட்டு பின்னர் தம்மிடமே இழுத்துக் கொண்டான் இத்தெய்வநாயகன். இவரிடம் ''அடியவர்க்கு மெய்யனாகிய நீ அடியேனையும் மெய்யனாக்கு'' என்பது கோரிக்கை! ''அச்சுதன் என்னும் திருநாமத்திற்கேற்ப தேவரீர் அடியேனை கைவிடலாகாது'' என்கிறார். மேலும் ''எம்பெருமானே நீ செய்யவேண்டியது என்ன தெரியுமா? அடியேன் **'தாரு புத்ரக: இவ'** அதாவது ஸத்வ, ரஜஸ், தமஸ் என்ற மூன்று கயிறுகளால் கட்டப்பட்ட ஒரு மர பொம்மை! இப்பொம்மையை ங்ஒரு பொம்மலாட்டக்காரனைப் போலசி நீயே ஆட்டிவைத்து, நல்ல வழியிலேயே செல்லவிட்டு அடியேன் நன்மை பெறும்படி நீ ஸங்கல்பித்தருளவேண்டும். ஏனெனில் கடமையை அறியாத நான் சாஸ்த்ரத்துக்கு மாறான வழியிலேயே சென்றுகொண்டிருக்கிறேன். அதையெண்ணி வெட்கப்படும் அடியேனை உன்னையன்றி ரக்ஷிக்க வேறு யாரே உளர்?'' என்று **அவ்வச்சுதனுக்கு ஒரு சதகமும்** பாடுகிறார்.

**கோபாலனிடமும்** ஒரு கோரிக்கை உண்டு! தம் இறுதிக் காலத்தில் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் எம்பெருமானின் அந்த க்ருஷ்ண வேஷத்தைத் தாம் அநுபவிக்க ஆசைப்படுகிறார். அழகிய திருவதரத்தில் புல்லாங்குழலும் திருமுடியில் சரிந்து நிற்கும் மயிற்பீலியும் மாலையும் இந்த்ரநீலமணியென ஒளிரும் திருமேனியுமாய் வேணுகோபாலனாகத் தோன்றி அடியேன் உள்ளத்தை வேறு எந்த சிந்தனையும் புகாதவாறு முழுவதுமாக நிறைத்துக் கொள்ளவேண்டுமென்பது இவரது ப்ரார்த்தனை. இது நம்முள்ளத்தையும் நிறைத்து நிற்கிறதன்றோ!

''கட்டுக்கடங்காது திரியும் காட்டு மிருகம் போன்ற அடியேனை **தயாதேவியே!** நீ மிகமிக உறுதியான பெரிய வலையாக இருந்து என்மேல் வீசப்பெற்று அதிலிருந்தும் நான் திமிறிக்கொண்டு தப்பி ஓடிவிடாதபடி என்னை அவ்வலையில் அகப்படுத்தி இழுத்துக்கொண்டு போய் திருவேங்கடமுடையானின் திருவடிகளில் சேர்த்து அவனை அநுபவிக்கும் போகத்திலேயே ஆழ்ந்துகிடக்கும்படி செய்ய வேண்டும்'' எனப் ப்ரார்த்திக்கிறார். தயையென்னும் குணம் ஒன்றினாலேயே இக்காரியம் நிறைவேறும், எனவேதான் இக்கோரிக்கையை தயா தேவியினுடைய திருவடிகளில் ஸமர்ப்பிக்கிறார் நம் ஆசார்ய ஸார்வபௌமன்.

கவிஸிம்ஹம் என்பதை நிரூபிக்க வல்லதாய் விளங்கும் தம்முடைய **பாதுகா ஸஹஸ்ரத்தில்** இவருடைய திருவுள்ளக்கிடக்கை வெளிப்படும் அழகு உணர்ந்து அநுபவிக்கத் தக்கதாகும். ஆயிரம் ச்லோகங்களைக் கொண்டு எம்பெருமானின் திருவடிகளை ரக்ஷிக்கும் பாதுகாதேவியை வெளிப்படையாகவும், ஸ்வாமி நம்மாழ்வரை உள்ளுறைப் பொருளாகவும் அமைத்துப் படைத்தளித்த இந்நூலின் இறுதியில் [ச். 969] இதைக் காணலாம்.

திருவரங்கனே அநுக்ரஹித்த **வேதாந்தாசார்யர்** என்னும் விருதும் ஸ்ரீரங்க நாச்சியார் அளித்த **ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர்** மற்றும் ஆன்றோர் அளித்த **கவிதார்க்கிக ஸிம்ஹம்** போன்ற பல விருதுகளைத் தாம் பெற்றிருந்த போதும் தமக்குப் பிடித்தமான விருது ஒன்று உண்டு என்கிறார் இவ்விடத்தில்!

''ஒருநாள் எம்பெருமான் தம் தூதுவர்களை அனுப்பி அடியேனை அப்பரமபதத்துக்கு அழைத்து வருமாறு நியமிப்பார். அவ்வமயம் அத்தூதுவர்களும் வந்து **ஹே! பாதுகா ஸேவகரே!** என்ற பெயரிட்டு அடியேனைக் கூப்பிடவேணும், இதுவே அடியேன் விரும்பும் **மிக உயர்ந்த விருதாகும்''** என்கிறார்! தம் உள்ளக்கிடக்கையை இவர் வெளியிடும் பாங்குதான் எத்துணை அற்புதமானது! ஸ்வாமியின் திருவுள்ளத்தில் நிரம்பி இருக்கும் பகவத், பாகவத, ஆசார்ய பக்தியை எடுத்துக் காட்டுவதற்கு இந்த ச்லோகம் ஒன்றே அமையாதோ!

ஸ்ரீ பாஷ்யகாரரின் திருவடிகளே நமக்குத் தஞ்சமெனக் காட்டியவர் ஸ்வாமி தேசிகன். தாம் அருளிச்செய்த **யதிராஜ ஸப்ததி**யைப் பூர்த்தி செய்கையில் தம் அபிலாஷையையும் நாம் உணரக்காட்டுகிறார். இந்த ஸப்ததியை ஸேவிப்போர் ராமாநுஜ தர்சனத்தைச் சேர்ந்தவர் மட்டுமின்றி பிற மதத்தினரும்கூட இத்தர்சனத்தின் பெருமையை நன்கு உணர்ந்து ஸ்ரீயதிராஜரின் திருவடிகளை ஆச்ரயித்து நற்கதி பெறவேண்டுமென்று அருளிச் செய்கிறார்! இவரது இத்திருவுள்ளப் பாங்கு இவரை ஒரு வைணவ ஆசார்யராக மட்டுமின்றி மனித குலத்துக்கே வாழ வழிகாட்டும் ஒரு மஹத்தான ஆசார்யர் என்று காட்டுகிறது எனக்கூறுவதில் தடையேதுமுண்டோ?

## ஸ்ரீ தேசிக மொழி

ஹே ஹம்ஸமே! அந்த சந்த்ர புஷ்கரணிக் கரையில் சேஷபீடத்தில் எழுந்தருளியிருக்கும் எங்கள் குலதனமான ரங்கநாதனை ஸாதுக்கள் வணங்குகிறார்கள். அங்கு சென்றடைவாயாக!

– ஹம்ஸ ஸந்தேசம்
(இராமன் ஹம்ஸத்தைத் தூது விடும் இடம்)

# 7. Vairagya Panchakam

Sri U.Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

Asceticism or being austere and indifferent to worldly desire (Vairagyam) is held as one of the three major qualities of a supreme Acharya in our Sampradaya. The others are knowledge (jnana) and perfect adherence to one's religious obligation (Anushtanam). The kind of asceticism exemplified by Swami Desika will hardly find a match and has been well documented in the form of Sri Vairagya Panchakam.

Originally this was not meant to be a Sthothra. It all started when our Acharya received a message from Vidyaranya, an Advaitin and a boyhood friend. He was, at that time, a court scholar and spiritual preceptor in the Vijayanagara kingdom.

It was, in fact, a royal invitation to adorn the court of Harihara and Bukka, the emperors. Vidyaranya, who came to know about the Uncha Vruthi way of life Swami Desika was so assiduously following and the dire straits he was in, apparently wanted to help him.

Consider the situation. Here was fortune presenting itself in the face even as Sri Desika was living in utter penury in Kanchi. He could have helped himself to court honour and a hefty bounty, which were there for the asking, if he wished so. Would anyone have the guts and gumption to turn down such a golden opportunity? No, not ordinary mortals, really.

But how did our great Acharya respond? He simply wrote and sent out a sloka to Vidyaranya, categorically declining the offer while making it absolutely clear that he was not a wee bit interested in worldly riches. He stressed that, according to him, the real treasure was Lord Krishna Himself, who turned His friend Kuchela into a Kubera in a trice.

The matter could have stopped with that. But it was not to be. Vidyaranya was still not out of his sense of sympathy for his friend, and unwilling to let go the opportunity to providing him a lifeline, so to say. He wrote to Swami Desika again, insisting him to reconsider the earlier decision and visit the emperors' court.



But Lord Varadaraja perhaps destined that the lone Sloka blossomed into a beautiful little hymn. The result was that our Acharya stood firm and wrote (a further) five slokas, reiterating his stance to close out the matter. Hence the hymn came to be known as Vairagya Panchakam.

Jnana and Anushtana are great, no doubt. But the rigorous self-denial and extreme abstinence observed by Swami Desika under the circumstances, call for outstanding courage and extreme commitment to one's principles. That's what makes our Acharya's Vairagya especially adorable and vaults it to a different altitude.

The author comes down heavily on the practice of praising petty kings and worthless masters for the sake of the stomach. He scorns at the wealth derived from such a shameful act and identifies as the real wealth the Lord who caused Arjuna to thrive, who lifted the Govardhana mountain, who is easily attained and who is worshipped by noble-minded people – Sareera Pathanaavadhi...

சரீர பதநாவதி ப்ரபு நிஷேவணாபாதநாத்
அபிந்தந தநஞ்ஜய ப்ரசமதம் தநம் தந்தநம்|

தநஞ்ஜய விவர்தநம் தநமுதூட கோவர்தநம்
ஸுஸாதநம் அபாதநம் ஸுமநஸாம் ஸமாராதநம்||



The above Sloka offers a fascinating insight into the author's command over the language involving the crux of the issue i.e. wealth. The term 'Dhana(m)' has been employed – either as a full word or a part there of – in 11 different contexts as given below:

1. Abindhana – With water as food
2. Dhananjayam – The fire in the belly
3. Dhanam – Wealth
4. Dandhanam – A waste
5. Dhananjaya – Arjuna
6. Vivardhanam – Promoted the interests of
7. Dhanam – (The real) Wealth
8. Govardhanam – The great hill
9. Susaadhanam – A perfect tool (to achieve a thing)
10. Apaadhanam – Wealth that is indestructible
11. Samaaraadhanam – One that results in happiness

The piece de resistance of this Sthothra is the classic climax. In a moving declaration, Swami Desika says, "There is no such thing as paternal property for me. Nor have I earned anything on my own. But I have the treasure (Lord Varadaraja) which was earned by my grandfather, on the summit of the Hasthi Giri".

நாஸ்தி பித்ரார்ஜிதம் கிஞ்சித் நமயா கிஞ்சிதார்ஜிதம்|
அஸ்தி மே ஹஸ்தி சைலாக்ரே வஸ்து பைதாமஹம் தனம் ||

Here, the word 'Paithaamaham' (பைதாமஹம்) is used to denote paternal grandfather as well as Brahma. It was Brahma, who, through his Aswamedha Yaga, secured the presence of Varadaraja in the Hasthi Giri. As convention would have it, the inheritance of treasure from grandfather to grandson is natural.

True to the spirit of the work, there is no Phala Sruti mentioned as such. However, one who recites this is sure to be richer in terms of 'Vairagya'.

***To be continued...***

## பங்குனியில் முக்கிய உத்ஸவங்கள்

**அன்னக்கூட திருப்பாவாடை உத்ஸவம்**
மார்ச் 15 (ஞாயிறு)

**யுகாதி உத்ஸவம்**
மார்ச் 25 (புதன்)

**ஸ்ரீராம நவமி உத்ஸவம்**
மார்ச் 25 (புதன்) முதல் 10 நாட்கள்

**ஸ்ரீ ராமன் அவதார உத்ஸவம்**
ஏப்ரல் 2 (வியாழன்)

**பட்டாபிஷேகம்**
ஏப்ரல் 3 (வெள்ளி)

**பங்குனி உத்தரம்**
**திருக்கல்யாண உத்ஸவம்**
ஏப்ரல் 6 (திங்கள்)

**ஊர்கோல உத்ஸவம்**
ஏப்ரல் 7 (செவ்வாய்)

**சித்திரை வருஷப்பிறப்பு உத்ஸவம்**
ஏப்ரல் 13 (திங்கள்)

ஸ்ரீ:

**கண்ணுக்கினியன**






## திருமழிசையாழ்வார் திருநக்ஷத்ரம்



## திருக்கச்சி நம்பிகள் திருநக்ஷத்ரம்














ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவர் வித்யா அபிவ்ருத்தி அர்ச்சனை உத்ஸவம்









ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவர் வித்யா அபிவ்ருத்தி அர்ச்சனை உத்ஸவம்







## ச்ரவணம் புறப்பாடு













வெள்ளிக்கிழமை உத்ஸவம்









தவனோத்ஸவம்







## தவனோத்ஸவம்







ஸ்ரீ:





மாசி-பௌர்ணமி புறப்பாடு - ஸமுத்ர ஸ்நாநம்













## விகாரி வருட பங்குனி மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| மார்ச் / ஏப்ரல் | பங்குனி | | | | | |
| 14.03.20 | 1 | பஞ்சமி | சனி | விசாகம் | மாதப்பிறப்பு – காலை – பெருமாள் உத்ஸவர் திருமஞ் சனம். மாலை – பெருமாள் திருவீதி புறப்பாடு | ஸ்ரீ ஐயப்பன் |
| 15.03.20 | 2 | ஷஷ்டி | ஞாயிறு | அநுஷம் | ஸ்ரீமந்நாதமுனிகள் | |
| 16.03.20 | 3 | ஸப்தமி (9.26) /அஷ்டமி | திங்கள் | கேட்டை | தொண்டரடிப் பொடிகள் | |
| 17.03.20 | 4 | அஷ்டமி | செவ்வாய் | மூலம் | திருமால்வடை | |
| 18.03.20 | 5 | அஷ்டமி (6.23) /நவமி | புதன் | பூராடம் | ஸேனைநாதன் | |
| 19.03.20 | 6 | தசமி | வியாழன் | உத்தராடம் | ஆளவந்தார் | |
| 20.3.20 | 7 | ஏகாதசி (6.59) / த்வாதசி | வெள்ளி | ச்ரவணம் | காலை – பெருமாள் தாயார் தேசிகன் உத்ஸவர் திருமஞ் சனம். மாலை – பெருமாள் தேசிகன் வீதிபுறப்பாடு பின்பு தாயார் உள் புறப்பாடு | ஏகாதசி: ஸ்ரீ S. பாலாஜி – ச்ரவணம் – ஸ்ரீ வசந்த் ஷான்பாக். வெள்ளி: ஸ்ரீ R. ராமக்ருஷ்ணன் |
| 21.3.20 | 8 | த்வாதசி (9.39) | சனி | அவிட்டம் | பூதத்தாழ்வார் | |
| 22.3.20 | 9 | த்ரயோதசி | ஞாயிறு | சதயம் | காலை – பேயாழ்வார் திருமஞ் சனம். மாலை – பேயாழ்வார் திருவீதி புறப்பாடு | ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்ய அஸோஸியேஷன் |
| 23.3.20 | 10 | சதுர்தசி | திங்கள் | பூரட்டாதி | திருமால்வடை | |
| 24.03.20 | 11 | அமாவாசை | செவ்வாய் | உத்தரட்டாதி | காலை – பெருமாள் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை – பெருமாள் திருவீதி புறப்பாடு | |
| 25.3.20 | 12 | ப்ரதமை | புதன் | ரேவதி | யுகாதி பண்டிகை – ராமநவமி உத்ஸவம் 1ம் நாள் – காலை – பெருமாள் திருமஞ்சனம். மதியம் – பஞ்சாங்க படனம். மாலை – ராமர் திருமஞ்சனம் – பொழுதுடன் திருஆராதனம் – பெருமாள் திருவீதி புறப்பாடு – ராமர் உள் புறப்பாடு – இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம் | யுகாதி உத்ஸவம்: ஸ்ரீ S. கோபால க்ருஷ்ணன். ராமர் உத்ஸவம் – ஸ்ரீ S. சுந்தரம் |
| 26.3.20 | 13 | த்விதீயை | வியாழன் | ரேவதி (1.58) | ராமர் உத்ஸவம் 2ம் நாள் – காலை – ராமர் திருமஞ் சனம் – மாலை – ராமர் உள் புறப்பாடு – இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம் | ஸ்ரீ M.A. பார்த்தஸாரதி |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 27.3.20 | 14 | த்ருதீயை | வெள்ளி | அச்வினி | ராமர் உத்ஸவம் 3ம் நாள் – காலை – ராமர் திருமஞ் சனம் – மாலை – ராமர் உள் புறப்பாடு – இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம் | ஸ்ரீ S. கோபாலன் |
| 28.3.20 | 15 | சதுர்த்தி | சனி | பரணி | ராமர் உத்ஸவம் 4ம் நாள் – காலை – ராமர் திருமஞ் சனம் – மாலை – ராமர் உள் புறப்பாடு – இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம் | ஸ்ரீ M. சக்ரபாணி ஐயங்கார் குடும்பம். C/o. ஸ்ரீ C. கேசவன் |
| 29.3.20 | 16 | பஞ்சமி | ஞாயிறு | கார்த்திகை | ராமர் உத்ஸவம் 5ம் நாள் – காலை – ராமர் திருமஞ் சனம் – மாலை – ராமர் உள் புறப்பாடு – இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம் | ஸ்ரீ K. ராமன் |
| 30.3.20 | 17 | ஷஷ்டி | திங்கள் | ரோஹிணி | ராமர் உத்ஸவம் 6ம் நாள் – காலை – ராமர் திருமஞ் சனம் – மாலை – ராமர் உள் புறப்பாடு – இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம் | ஸ்ரீ V.C. முரளிதரன் |
| 31.3.20 | 18 | ஸப்தமி | செவ்வாய் | ம்ருகசீர்ஷம் | ராமர் உத்ஸவம் 7ம் நாள் – காலை – ராமர் திருமஞ் சனம் – மாலை – ராமர் உள் புறப்பாடு – இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம் | ஸ்ரீ ராம்ப்ரசாத் பார்த்தசாரதி |
| 1.4.20 | 19 | அஷ்டமி | புதன் | திருவாதிரை | ராமர் உத்ஸவம் 8ம் நாள் – காலை – ராமர் திருமஞ் சனம் – மாலை – ராமர் உள் புறப்பாடு – இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம் | ஸ்ரீமதி ஸ்ரீநிதி மோகன் |
| 2.4.20 | 20 | நவமி | வியாழன் | புனர்வஸு | ராமர் உத்ஸவம் 9ம் நாள் – காலை – ராமர் மூலவர் உற்சவர் திருமஞ்சனம் – மாலை – ராமர் உள் புறப்பாடு – இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம் சாற்றுமுறை | திருமஞ்சனம் (மட்டும்) ஸ்ரீ பாஷ்யம் ஐயங்கார் குடும்பத்தினர். ஸ்ரீராமநவமி – ஸ்ரீமதி அம்புஜம் அனந்தராமன், ஸ்ரீ அனந்தராமன் |
| 3.4.20 | 21 | தசமி | வெள்ளி | புஷ்யம் | பட்டாபிஷேகம் காலை ஸ்ரீ ராமர் திருமஞ்சனம். மாலை – பொழதுடன் திருஆராதனம் பின்பு வீதிபுறப்பாடு | ஸ்ரீ K.J. ஸுகுமார் |
| 4.4.20 | 22 | ஏகாதசி | சனி | ஆயில்யம் | காலை – பெருமாள் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை – பெருமாள் திருவீதி புறப்பாடு | ஸ்ரீ T.V. கோபாலதேசிகன் |
| 5.4.20 | 23 | த்வாதசி | ஞாயிறு | மகம் | திருமழிசையாழ்வார் | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6.4.20 | 24 | த்ரயோதசி | திங்கள் | பூரம் (09.32) / உத்தரம் | பங்குனி உத்தரம் – காலை – பெருமாள், தாயார் திருமஞ்சனம். மாலை – பெருமாள் திருவீதி புறப்பாடு பின்பு தாயாருடன் பத்தி உலாத்தல் – இரவு திருக்கல்யாண உத்ஸவம், சேர்த்தி ஸேவை | ஸ்ரீமதி ப்ரேமா கஸ்தூரி |
| 7.4.20 | 25 | சதுர்த்தி | செவ்வாய் | உத்தரம் (5.25) | ஊர்கோல உத்ஸவம் – மாலை – பெருமாள், தாயார், ஆண்டாள் பத்தி உலாத்தல் பின்பு பெருமாள், ஆண்டாள் திருவீதி புறப்பாடு | ஸ்ரீமதி ப்ரேமா கஸ்தூரி |
| 8.4.20 | 26 | பௌர்ணமி | புதன் | ஹஸ்தம் சித்திரை | காலை – பெருமாள் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை – பெருமாள் திருவீதி புறப்பாடு | |
| 9.4.20 | 27 | ப்ரதமை (1.05) | வியாழன் | ஸ்வாதி | காலை – நரசிம்மர் மூலவர், உத்ஸவர் திருமஞ்சனம் | |
| 10.4.20 | 28 | த்ருதீயை | வெள்ளி | விசாகம் | காலை – பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை – தாயார் உள் புறப்பாடு | ஸ்ரீ S. பாலாஜி |
| 11.04.20 | 29 | சதுர்த்தி | சனி | அநுஷம் | நாதமுனிகள் | |
| 12.4.20 | 30 | பஞ்சமி | ஞாயிறு | கேட்டை | தொண்டரடிப் பொடிகள் | |
| 13.4.20 | 31 | ஷஷ்டி | திங்கள் | மூலம் | சார்வரி தமிழ் வருஷப்பிறப்பு – சித்திரை விஷு புண்யகாலம் – பெருமாள், தாயார் மூலவர் உத்ஸவர், தேசிகன் திருமஞ்சனம். மாலை – பொழுதுடன் திருஆராதனம், வீதிபுறப்பாடு | P.D.R. ட்ரஸ்ட் |


## ஆஸ்திகர்களுக்கு ஓர் அறிவிப்பு

பித்ரு காரியங்கள் செய்வதற்கு, சென்னை மயிலை ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான (G.K. மண்டபம் அருகில்) அறைகள் வாடகைக்கு விடப்படும்.

விவரங்களுக்கு தேவஸ்தான அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,**

4/11, கேசவ பெருமாள் கோயில் சன்னதி தெரு,

மயிலாப்பூர், சென்னை 600 004. தொலைபேசி: 044-2495 3799.

ஸ்ரீ:

# ஸ்ரீநிவாஸ கல்யாண வைபோகமே

ஸ்ரீமதி ரமா ராகவஸிம்ஹன்

**அனைத்து ஸ்ரீவைஷ்ணவ கோவில்களிலேயும் எம்பெருமானுக்கும் பிராட்டிக்கும் விவாஹ வைபவம் நடக்கும் உயர்ந்த மாதம் பங்குனி. ஸீதா கல்யாணம், ராதா கல்யாணம், ருக்மிணி கல்யாணம், ஆண்டாள் கல்யாணம் என்று ஊரே கோலாஹலமாய் இருக்கும். எல்லாமே பிராட்டியை முன்னிட்டு பெயர் அமைந்த விவாஹங்களாக இருக்க, திருவேங்கடமுடையான் விவாஹத்திற்கு மட்டும் பத்மாவதி கல்யாணம் என்றில்லாமல் ஏன் ஸ்ரீநிவாஸ கல்யாணம் என்ற பெயர் உண்டாயிற்று என்பதனைப் பார்ப்போம்.**

ஸ்ரீமந்நாராயணன் ச்ரிய: பதி. பிராட்டி நித்யவாஸம் பண்ணுவதனால் அவன் 'ஸ்ரீநிவாஸன்'. 'ஸ்ரீ' சப்தத்தினை 'நிவாஸன்' என்பதிலிருந்து பிரிப்பது துர்லபம். பிரித்துக் காண்போமானால் என்னவாகும்?

ராமன் (எம்பெருமான்) மட்டும் வேண்டுமென்றாள் சூர்ப்பனகை. அபசாரப்பட்டு அனைத்தையும் இழந்தாள்.

பிராட்டி (தாயார்) மட்டும் வேண்டுமென்றான் லங்கேஸ்வரன். அபசாரப்பட்டு அனைத்தையும் இழந்தான்.

எம்பெருமானையும் பிராட்டியையும் ஒருசேரச் சரணடைந்தான் விபீஷணன். அனைத்தையும் பெற்றான்.


ஸ்ரீநிவாஸ கல்யாணத்தில் ராமாயணம் எங்கிருந்து வந்தது? 'ஹரி:ஓம்' என்று ஸ்ரீநிவாஸ கல்யாணம் ஆரம்பித்ததே இராமாயண காலத்தில் தானே? அதென்ன கதை?

ஸ்ரீநிவாஸனாய் எம்பெருமான் அவதரித்த காலத்தே எம்பெருமானுக்குப் பெண் கேட்டு யசோதை ஏன் ஆகாசராஜனிடம் சென்றாள்? ஸ்ரீநிவாஸ கல்யாணத்தில் மஹாபாரதம் எங்கிருந்து வந்தது? இதென்ன இரண்டாவது கதை?

பிராட்டிக்கு ஆதீனமானவன் எம்பெருமான். அகல கில்லேன் இறையும் என்ற பிராட்டியானவள் எம்பெருமானின் திருமார்பினை விட்டு விலகிச் சென்றது ஏன்? இதென்ன மூன்றாவது கதை?

**பூர்வ கதை 1 - இராமாயண காலம்**

வெகுகாலத்திற்கு முன்னர் குஸத்வஜர் என்றொரு ரிஷி கானகத்தே குடிலமைத்து ஸதா வேத பாராயணம்



பண்ணிக் கொண்டிருந்தார். தானத்தில் சிறந்தது கன்யா தானம் என்கிறது சாஸ்த்ரம். குஸத்வஜருக்கு, ஸ்ரீமந்நாராயணனுக்கு கன்யாதானம் பண்ண வேண்டுமென்ற ஆசை தோன்றிற்று.

வேத பாராயணம் பண்ணுபவர்க்கு ஆசைப்பட்ட தெல்லாம் அமையும் என்று வேதமே சொல்கின்றது. குஸத்வஜர் பாராயணம் பண்ணிக் கொண்டிருந்த வேதமானது அவரது உள்ளக்கிடக்கினை அறிந்து, தானே அவருக்கு மகவாக ஜனிக்கத் திருவுள்ளம் கொண்டு, அவரது திருவாயின் வழியே ஒரு குழந்தையாக வடிவெடுத்து அவரது மடியினில் விழுந்தது. அதனை 'வேதவதி' என்ற திருநாமமிட்டு குஸத்வஜர் வளர்க்கலானார்.

வேதவதி, தேவர்களின் ஹ்ருதயங்களை கொள்ளை கொள்ளும் பேரழகியாக வளர்ந்து நின்றாள். வருணன் குஸத்வஜரிடம் வேதவதியைப் பெண் கேட்டு வர அவளை ஸ்ரீமந்நாராயணனுக்கு கன்யாதானம் கொடுப்பதற்காகத் தான் வளர்ப்பதாக அவர் கூறிவிட்டார். ஸாத்விகனான வருணன் தன் வழி சென்று விட, தம்பு என்ற அஸுரன் வேதவதியைப் பெண் கேட்டு வந்து நின்றான். குஸத்வஜர் மறுத்தவுடன் அஸுர குணம் மேலோங்க தனது கத்தி யினை எடுத்து குஸத்வஜரை வதைத்து விடுகின்றான் தம்பு. இதைக் கண்ணுறும் குஸத்வஜரின் துணைவியும் அவருடன் தன் ப்ராணனை விட்டு விட, சுதாரித்துக் கொண்ட வேதவதி கானகத்துள் சென்று தம்புவிடமிருந்து தப்பித்து விடுகின்றாள்.

அடர்ந்த கானகத்திற்குள் சென்ற யுவதியான வேதவதி தன் ப்ராணநாதனான ஸ்ரீமந்நாராயணனை நோக்கிக் கடுந்தவம் புரிந்து கொண்டிருந்த காலத்தே ஒரு நாள் லங்கையின் அரசனாம் ராவணேச்வரன் அவ்வழியாகச் செல்ல நேர்ந்தது. வேதவதியினைக் கண்ட லங்கேஸ்வரனின் ஹ்ருதயம் அவளது அழகில் பேதலித்தது. தன்னை மணக்குமாறு லங்கேஸ்வரன் கூற ''மணந்தால் ஸ்ரீமந்நாராயணனையே நான் மணப்பேன்'' என்றுரைத்தாள் வேதவதி. வற்புறுத்தி அவளை மணஞ் செய்யும் முடிவுடன் லங்கேஸ்வரன் அவளருகில் செல்ல, தானிருந்த இடத்தினை விட்டகன்ற வேதவதியின் சிகை மட்டுமே அவளை எட்டிப் பிடிக்க முயன்ற லங்கேஸ்வரனின் கைகளில் சிக்கிற்று.

வேதவதியின் சிகையானது கூர்மையான கத்தியாக மாறி அவனது கைகளைப் பதம் பார்த்தது. ராவணனின் கைகளிலிருந்து குருதி வழிந்தது. வலி பொறுக்காது லங்கேஸ்வரன் துடிக்க 'நீ தீண்டிய இந்த மேனியுடன் நான் ஸ்ரீமந்நாராயணனை அடைய முடியாது. எனது தகப்பனாரின் கனவிற்குக் குந்தகம் விளைவித்த உனது அழிவிற்கு நானே காரணமாக இருப்பேன்!' என்று சபித்து விட்டு, தனது தவத்தின் வலிமையினால் அக்னியை உருவாக்கி அதனுள் அமிழ்ந்தாள் வேதவதி. அக்னி தேவனும் அவளைத் தன்னுடன் பாதாள லோகம் அழைத்துச் சென்று தனது மனைவியான ஸ்வாஹாவிடம் ஒப்படைத்து அவளை பத்திரமாகக் காக்குமாறு பணித்தான்.


பிற்காலத்தில் ராமன் மாய மானினைத் தேடியோட, இலக்குவனோ ராமனைத் தேடியோட, லங்கேஸ்வரன் 'காசையாடை மூடி ஓடி' சீதையினை கவர்ந்து செல்ல முற்படுகிறான். ராமன் மானைத் தேடி ஓடும்முன் அக்னி பகவானிடத்தே அவரை ஸாக்ஷியாகக் கொண்டு தான் மணமுடித்த சீதையினைக் காத்தருளுமாறு ப்ரார்த்தித்துச் சென்றான். கபடவேடதாரியாம் லங்கேஸ்வரனின் பார்வையில் இருந்த கள்ள த்தனம் கண்டுகொண்ட பிராட்டியும், குடிலுக்குள் சென்று அக்னி தேவனிடம் தனது மனோரதத்தினை வெளிப்படுத்த, அக்னி தேவன் அவளைக் காக்கும் கடமைக் கொள்கின்றான். அவளைத் தனது அக்னி லோகத்தில் பத்திரமாகச் சேர்த்து விட்டு, அங்கிருந்த வேதவதியினை சீதாதேவியாக லங்கேஸ்வரனுடன் அனுப்புகிறான்.

ஐயிரு திங்கள் அசோகவனந்தனில் பிராட்டியாக அத்துணை பரிஸ்ரமங்களையும் அனுபவித்தவள் வேதவதியாவாள். வேதவதியளித்த சாபம் நிறை வேறும்படி லங்கேஸ்வரனது வதமானது ஸீதையாக அஸோகவனத்தில் வீற்றிருந்த அவளது பொருட்டே உண்டானது. பின்னர் ராமன் சீதையென்று நினைத்து வேதவதியினை அக்னியினில் பிரவேசிக்கச் சொல்ல, அவனது திருநேத்ரங்களுக்கு மட்டுமே தெரியுமாறு இரண்டு பிராட்டியினை காண்பிக்கிறார் அக்னி பகவான். மற்றொரு பெண் யாரென்று ராமன் கேட்க, வேதவதியின் கதையினை அக்னி பகவான் ராமனிடத்தே கூறுகிறார்.

சீதையானவள், தனக்காக லங்கையில் பரிச்ரமங்களை அநுபவித்த வேதவதியையும் ஸ்ரீராமன் மணமுடிக்க வேண்டுமென்று கூற, ''ராமாவதாரத்தில் எனக்கு ஒரு பார்யை மட்டுமே. வேதவதியை இருபத்தியெட்டாம் கலியுகந்தனில் நான் மணம் முடிப்பேன்'' என்று ஸாதிக்கின்றான் எம்பெருமான்.

**பூர்வ கதை 2 - மஹாபாரதம்**

க்ருஷ்ணாவதாரம் பூர்ணமான ஒரு அவதாரம். குறையொன்றுமில்லாத அவதாரம் எனப்படும் க்ருஷ்ணாவதாரத்திலும், யசோதைக்கு மட்டும் ஒரே ஒரு குறை இருந்ததாம். என்ன தவம் செய்தனை யசோதா என்று ப்ரபஞ்சமே பொறாமைப்படும் யசோதைக்கு அப்படி என்ன குறை?



'ஹே க்ருஷ்ண! உனது சிறுபிராயத்தில் நீ செய்யாத அட்டஹாஸங்களேஇல்லையெனலாம். வெண்ணைப் பானையினையெல்லாம் உடைத்து விடுவாய். தயிரையும் பாலையும் வீடு எங்கும் ஆறுபோல் ஓடச்செய்வாய். பிருந்தாவனத்தின்பெண்டிரிடம்வம்பு புரிந்து சண்டை இழுத்து வருவாய். உன்னால் நான் படாத பாடே கிடையாது. வாங்காத வசைமொழியே கிடையாது. இவ்வாறெல்லாம் எண்ணவொண்ணா அமர்க்களங்களை நீ புரிந்த போதும் உனது அவற்றை நான் பொறுத்துக் கொண்டேனே! உன்னை என் கண்ணின் மணி போல் கொண்டாடினேனே! ஆனால் நீயோ இதையெல்லாம் மறந்து, எட்டுப் பெண்களை மணந்தாய். பதினாறாயிரம் பெண்டிருடன் குதூஹலித்திருந்தாய். இவற்றில் ஒரே ஒரு பெண் கூட நான் உனக்குப் பார்த்தவளில்லை. அந்த உரிமையினை நீ எனக்கு அளிக்கவில்லையே!'' என்று யசோதை ஆதங்கப்பட்டிருக்கிறாள்.

**மூன்றாவது கதை – 'அகலகில்லேன்' என்றவள் ஏன் அகன்றாள்?**

ஞானத்தில் உயர்ந்த முனிச்ரேஷ்டர்கள் அனைவரும் ஒன்று கூடி ஒரு ஹோமம் செய்ய முடிவெடுக் கின்றனர். அதன் ஹவிஸ்ஸை யாருக்குக் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் யோசிக்க, மும்மூர்த்தி களுள் யார் ஸாத்விகர் என்றறிய, தவத்தில் சிறந்த வராம் ப்ருகு முனிவரிடம் அதனை அறிந்து வருமாறு விஜ்ஞாபிக்கின்றனர்.

ப்ருகு முதலில் ப்ரஹ்ம லோகத்திற்குச் செல்கின்றார். ஸரஸ்வதியுடன் யோக விசாரத்திலிருந்த ப்ரஹ்மா உத்தரவு கேட்காமல் வந்ததற்காக ப்ருகு முனிவரைக் கோபித்துக் கொள்ள, ''பூலோகத்தில் உனக்கு கோவில்களே இருக்காது'' என்று சபித்து விட, ப்ருகு அங்கிருந்து கைலாயத்திற்கு செல்கிறார். பார்வதியுடன் ஏகாந்தமாக இருந்த ருத்ரன் கோபம் கொண்டு ப்ருகு முனிவரை தனது சூலாயுதத்தினால் தாக்க முற்பட, பார்வதி தேவி தடுத்ததனால் தப்பித்து, ருத்ரனுக்கும் ஸாத்விகத்திற்கும் ஸம்பந்தமே இல்லை. ஹோமத்தின் ஹவிஸ் அவனுக்குக் கிடையாது என்று முடிவு செய்து, திருப்பாற்கடலை அடைகின்றார் ப்ருகு. பிராட்டியுடன் எம்பெருமான் அநந்த சயனத்தில் இருக்க, எம்பெருமானின் திருமார்பினில் தனது காலினால் உதைக்கின்றார் முனிவர். சயனம் கலைந்த நிலையிலும் எம்பெருமான் ப்ருகு முனிவரைக் கோபிக்காது, அவரது திருவடிகள் சம்பந்தம் தனக்கு ஏற்பட்டது தனது பாக்கியம் என்று கூறி, அவரது திருவடி நோவு காணாதிருக்க அவற்றிற்கு வெந்நீர் ஒத்தடம் கொடுத்து மரியாதை செய்கின்றார்.

இதனைக் கண்ணுற்ற பிராட்டியானவள், தானிருக்கும் எம்பெருமானின் ஹ்ருதயத்தினை ப்ருகு முனிவர் காலினால் உதைத்தும் அவரைக் கோபியாதிருக்கும் எம்பெருமானிடம் கோபித்துக் கொண்டு ஒருக்ஷணத்தில் மறைந்து விடுகின்றாள். அவளைத் தேடிச் சென்ற எம்பெருமானிடம் பிராட்டி

கபில மகரிஷி ஆச்ரமத்தில் இருப்பதாக நாரதர் கூற, எம்பெருமான் அங்கு செல்வதற்குள் பிராட்டி தற்போதைய மஹாராஷ்ட்ரத்தில் உள்ள கொல்ஹாபூர் சென்று விடுகிறாள். அங்கு அவளது ஸேவைக்காகக் காத்திருக்கும் பக்தர்களில் ஒருவனாக எம்பெருமான் நிற்க, பிராட்டி பாராமுகமாக இருந்து, அவரது காதுகளில் மட்டும் கேட்கும்படியாக ''என்னை நோக்கி தவம் புரியுங்கள்'' என்று கூறுகிறாள். எவ்விடத்தில் நான் அத்தவத்தினை மேற்கொள்ள வேண்டுமென்று எம்பெருமான் கேட்க, ''நான் கூறும் வரை நீங்கள் பிரயாணம் செய்யுங்கள். நீங்கள் தவம் புரிய வேண்டிய இடம் வந்தவுடன் நான் கூறுகிறேன்'' என்று ஸாதிக்கிறாள் பிராட்டி.

கருடன் உருமாறி பரியாக வர, அதன் மேல் ஏறி தெற்கு நோக்கிப் பயணிக்கின்றார் எம்பெருமான். ஸம காலத்தில், சுக முனிவர் தவம் புரிந்து வந்த இடமான 'சுகனூர்', மரியாதை நிமித்தம் 'திருச்சுகனூர்' என்றாகி, பேச்சு வழக்கில் 'திருச்சானூர்' என்றானது. அந்த இடத்திற்கு எம்பெருமான் வந்ததும் ''இவ்விடத்தில் தவம் புரியுங்கள்'' என்று அசரீரியாக பிராட்டி கூற எம்பெருமான் அவ்விடத்தே தவம் செய்யலானார்.

பிராட்டியினை நோக்கி தவம் புரிவதென்றால் ஸதா ஸர்வ காலமும் முழுவதும் மலர்ந்த தாமரைகளினைக் கொண்டு அவளுக்கு அர்ச்சனை செய்வது என்பது பொருள். திருச்சானூரிலோ குளமே இருக்கவில்லை. எம்பெருமான் ஈட்டியினால் தரையினில் ஓங்கி ஒரு தட்டு தட்ட, அங்கே ஒரு பெரிய புஷ்கரிணி உண்டாயிற்று. கருடன் ஸ்வர்க லோகத்திலிருந்து கொண்டு வந்த ஆகாசத் தாமரையின் விதைகளைத் தூவ, அக்குளத்தில் தாமரை மலர்கள் பூத்தன. ஸூர்ய அஸ்தமனத்திற்குப் பின்னரும் அத்தாமரைகள் மலர்ந்த வண்ணமே இருப்பதற்கென அந்தப் புஷ்கரிணியினை நோக்கிய வண்ணம் ஸூர்யநாராயணன் ஸந்நிதியினை அமைத்து பன்னிரண்டு வருடங்கள் பிராட்டியினை நோக்கி எம்பெருமான் தவம் புரிந்தார். மனமிரங்கிய பிராட்டியானவள் எம்பெருமானுக்கு ஸேவை ஸாதித்தாள். 'முன்னொரு காலத்தில் நீர் ஒரு ரிஷி புத்ரிக்கு அளித்த வரத்தினை நிறைவேற்றும் வரை நான் உம்மிடம் வர மாட்டேன்' என்று கூறிவிட்டு பிராட்டி மறைந்து விட்டாள்.

அப்பொழுது நடந்து கொண்டிருந்தது இருபத்தியெட்டாவது கலியுகம்.

**ஸ்ரீநிவாஸ கல்யாண வைபோகமே**

எங்கு செல்வதென்று யோசித்தவாறிருந்த எம்பெருமான் கண்களில் 'வேத வெற்பு' என்று கொண்டாடப்படும் திருமலை தெரிந்தது. அங்கு சென்று, திருமலைக்கு அதிபதியான வராஹப் பெருமானிடம் ப்ரார்த்தித்து, நூறு சதுர அடி இடத்தினை தான் புழங்குவதற்கென வாங்கிக் கொள்கிறார். அங்கிருந்தபடி தினமும் வேட்டைக்குச் சென்று வந்து கொண்டிருந்த வேளைகளில், வராஹப் பெருமானின் பந்துக்களாம் வராஹங்கள் ஸ்ரீநிவாஸப் பெருமானுடன் சண்டையிட்டு அவரது திருமேனியினை நோவுகாணச் செய்கின்றன. தன்னிடம் இதனைப் பற்றி முறையிட்ட ஸ்ரீநிவாஸனுக்கு உதவியாக 'வகுளமாலை' என்ற மூதாட்டியை வராஹப்பிரான் ஏற்பாடு செய்கின்றார். இந்த வகுளமாலைதான் இரண்டாவது பூர்வ கதையில் வந்த யசோதை.

எப்பொழுதும் போல் காட்டிற்கு வேட்டைக்குச் சென்றிருந்த ஸ்ரீநிவாஸன், அந்தப் பிரதேசத்தின் ராஜாவான ஆகாசராஜா மற்றும் அவரது மனைவி தரணிதேவி ஆகியோரின் புத்ரியான பத்மாவதியைக் காண்கிறார். இந்த பத்மாவதி தான் நமது முதல் பூர்வ கதையில் வந்த வேதவதி.

பத்மாவதி மேல் தீராத ஆசை கொண்ட ஸ்ரீநிவாஸன் வகுளமாலையிடம் தனக்காக அவளைப் பெண் கேட்குமாறு சொல்ல, அவளும் பத்மாவதியின் தாயான தரணிதேவியிடம் பெண் கேட்கிறாள். தரணிதேவி ஒப்புக்கொள்ள ஆகாசராஜனும் தனது சம்மதத்தினைத் தெரிவிக்க, ஸ்ரீநிவாஸ கல்யாணம் முப்பத்து முக்கோடி தேவர்கள் மற்றும் அறுபத்தியாராயிரம் அஸுரர்கள் உட்பட ஒரு கோடி இஷ்ட மித்ர பந்துக்கள் சூழ இனிதே நடந்தேறியது. கல்யாணத்திற்கு முன்னர், எம்பெருமானுக்கு எண்ணெய் தேய்த்து நலங்கிட வந்த பிராட்டியும், எம்பெருமான் தானளித்த திருவாக்கினை நிறைவேற்றியதால் கோபம் தணிந்து அவன் திருமார்பினை மீண்டும் அலங்கரித்தாள்.

வகுளமாலையாக வந்த யசோதைக்கு, எம்பெருமான் தான் பார்த்த வதுவினை மணக்கவில்லை என்ற குறையகன்றது. எம்பெருமான் 'தயா ஸாகரம்' என்பதற்கு இந்த வ்ருத்தாந்தம் ப்ரமாணம். பிராட்டியின் புருஷகாரத்திற்கு ஸ்ரீநிவாஸ கல்யாணமே ப்ரமாணம்.

பங்குனி உத்தர நன்னாளில் ஸ்ரீநிவாஸ கல்யாணத்திற்குக் காரணமான இந்த நிகழ்வுகளில் நினைவைச் செலுத்தி, எம்பெருமானைத் துதித்து, ஸ்ரீ பத்மாவதி நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸனின் இன்னருளுக்கு இலக்காவோம்!

**Sponsorships and donations towards publication expenses are welcome**

ஸ்ரீ:




*With Best Compliments from:*

**Purisai (Mani) Rangachariar Family,**
14/22, Arisikaran Street,
Mylapore,
Chennai 600 004.

**&**

**Thirukallam Chakravarthy Padmanabhan,**
New No. 42,
4th Trust Cross Street,
Mandaveli, Chennai 600 028.

**SVDD thanks Sri Purisai Rangachariar Family & Sri Chakravarthy Padmanabhan**
for sponsoring this month's issue of Desika Sandesam


தவனோத்ஸவம்


தவனோத்ஸவம்